# JSR IAS ACADEMY

# பொது அறிவியல்

# உரியியல்

# உயிரினங்களின் வகைப்பாடு

## உயிரி உலகின் வகைப்பாடு

### வகைப்பாட்டியல் (Taxonomy)

- (கிரே.Taxis - வரிசைப்படுத்துதல், Nomos சட்டம்)
- கரோலஸ் லின்னேயஸ் (Carolus Linnaeus) **'நவீனவகைப்பாட்டியலின் தந்தை '** எனப்படுகிறார்.
- அஸ்டாடில் (Aristotle) **'பாரம்பரிய (Father Of Animalogy) வகைப்பாட்டியலின் தந்தை'** என அழைக்கப்படுகிறார்.
- முதன் முதலில் அரிஸ்டாடில் தன்னுடைய நூலான **'விலங்குகளின் வரலாறு' (History of Animals)** எனும் இலத்தீன் நூலில் விலங்குகளை வகைப்படுத்தியுள்ளார்
- இரத்தத்தின் அடிப்படையில் **எனைமா (Enaima)** (இரத்தமுடையவை) மற்றும் **அனைமா (Anaima)** (இரத்தமற்றவை) என இருவகைகளாகப் பிரித்தார்.

### வகைப்படுத்துதலின் பிரிவுகள்

1. செயற்கை வகைப்பாட்டு முறை
2. இயற்கை வகைப்பாட்டு முறை
3. மரபுவழி வகைப்பாட்டு முறை
4. நவீன வகைப்பாட்டு முறை

### செயற்கை வகைப்பாட்டு முறை

- **தாவரங்களின் புறத்தோற்றப் பண்புகளின் அடிப்படையில்** வகைப்படுத்தப்படுவது செயற்கை வகைப்பாட்டு முறை எனப்படும்.
- செயற்கை வகைப்பாட்டு உருவாக்கியவர் **கரோலஸ் லின்னேயஸ்** என்பவர் ஆவார். அவர் தமது **ஸ்பீசிஸ் பிளான்டாரம்** என்ற புத்தகத்தில் இதைப் பற்றிக் குறிப்பிடுள்ளார்.

### இயற்கை வகைப்பாட்டு முறை

- **தாவரங்களின் பல பண்புகளின் அடிப்படையில்** இயற்கை வகைப்பாட்டு முறை உருவாக்கப்பட்டுள்ளது.
- **பெந்தம் மற்றும் ஹுக்கர்** ஆகியோர் இந்த இயற்கை வகைப்பாட்டு முறையைத் தங்கள் **ஜெனிரா பிளான்டாரம்** என்ற மூன்று தொகுதிகளைக் கொண்ட புத்தகத்தில் விளக்கியுள்ளனர்.

### மரபுவழி வகைப்பாட்டு முறை

- மரபியல் தொடர்புகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட வகைப்பாடு **மரபுத் தொகுதி தொடர்பு (Phylogenetic) அல்லது கிளாடிஸ்டிக் வகைப்பாடு (cladistic classification)** எனப்படுகிறது.
- பரிணாமத் தொடர்புகளை **கிளாடோகிராம்** என்னும் மர வரைபடத்தின் மூலம் விளக்குவதை **எர்னஸ்ட் ஹெக்கல் (Ernst Haeckal)** அறிமுகப்படுத்தினார்.

| இரண்டு பெரும்பிரிவு | மூன்று பெரும்பிரிவு | நான்கு பெரும்பிரிவு | ஐந்து பெரும்பிரிவு |
|---|---|---|---|
|  கார்ல் லின்னேயஸ் (1735) |  எர்னெஸ்ட் ஹெக்கேல் (1866) |  கோப்லேண்ட் (1956) |  R.H. விட்டாக்கெர் (1969) |
| 1. பிளாண்டே<br>2. அனிமேலியா | 1. புரோட்டிஸ்டா<br>2. பிளாண்டே<br>3. அனிமேலியா | 1. மொனிரா<br>2. புரோட்டிஸ்டா<br>3. பிளாண்டே<br>4. அனிமேலியா | 1. மொனிரா<br>2. புரோட்டிஸ்டா<br>3. பூஞ்சைகள்<br>4. பிளாண்டே<br>5. அனிமேலியா |




**மூன்று பேருலக வகைப்பாடு(Three Domains of life)**

- **கார்ல் வோயிஸ் (Carl Woese, 1977)** முயற்சியால் முப்பேருலக கோட்பாடு முன்மொழியப்பட்டது.
- புரோகேரியோட்டுகளை **பாக்டீரியா மற்றும் ஆர்க்கியா (Achaea)** என்ற இரு பிரிவுகளாகப் பிரிப்பதை வலியுறுத்துகிறது.
- அதுமட்டுமின்றி எல்லா யூகேரியோட்டுகளையும் **யூகேரியா (Eukarya)** என்ற பேருலகிற்குள் கொண்டு வருகிறது.




**1. பேருலகு - ஆர்க்கியா (Domain Archaea)**

- சாதகமற்ற சூழ்நிலைகளிலும் வாழும் திறனுடையதால் இவை **எக்ஸ்ட்ரிமோஃபைல்ஸ்** என அழைக்கப்படுகின்றன.
- உப்புத்தன்மையுள்ள சூழ்நிலையில் வாழும் சில உயிரினங்கள் **ஹேலோஃபைல்கள்** எனவும்
- அதிக வெப்பம் மற்றும் அமிலத்தன்மையில் வாழும் உயிரினங்கள் **தெர்மோஅஸிடோபைல்கள்** எனவும் அழைக்கப்படுகின்றன.

**2.பேருலகு - பாக்டீரியா**

- **பெட்டிடோகிளைக்கன் (Peptidoglycans)** கொண்ட செல்சுவரைப் பெற்றுள்ளன.
- **சையனோபாக்டீரியாக்கள்** எனப்படும் ஆக்ஸிஜனை உற்பத்தி செய்யக்கூடிய **நீலப் பச்சைப் பாசிகள்** புவியின் தொடக்கக் காலமான **ஜியோலாஜிக் காலத்தில் ஆக்ஸிஜனை உற்பத்தி செய்ததன் மூலம் புவியைக் காற்றற்ற சூழலிலிருந்து காற்றுள்ள சூழலுக்கு மாற்றியதில்** முக்கிய பங்காற்றியுள்ளன.

**3. பேருலகு - யூகேரியா (Eukarya)**

இப்பேருலகின் கீழ் வரும் உயிரிகள் **புரோட்டிஸ்டா, பூஞ்சைகள், தாவரங்கள் மற்றும் விலங்குகள்** எனப் பிரிக்கப்பட்டுள்ளன.

**தாமஸ் கேவாலியர்-ஸ்மித்,** 1998 ஆம் ஆண்டு உயிரி உலகத்திற்கு திருத்தப்பட்ட **ஆறு பெரும்பிரிவு** வகைப்பாட்டினை வெளியிட்டார்.

இதில் மொனிரா என்ற பெரும்பிரிவை

- ஆர்க்கிபாக்டீரியங்கள்,
- யுபாக்டீரியங்கள்

என்று இரண்டாகப் பிரித்தார்.

****************************************************************

**ருகிரோவும்** சக ஆய்வாளர்களும் **2015** ஆம் ஆண்டு **ஏழு பெரும்பிரிவு** வகைப்பாட்டினை வெளியிட்டனர்.

இந்த வகைப்பாட்டின்படி உயிரிகள் இரண்டு மிகப்பெரும்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

1. புரோகேரியோட்டா
2. யுகேரியோட்டா

**புரோகேரியோட்டா** இரண்டு பெரும்பிரிவுகளாகவும் அதாவது

1. ஆர்க்கிபாக்டீரியா
2. யுபாக்டீரியா எனவும்,

**யுகேரியோட்டாவை**

1. புரோட்டோசோவா,
2. குரோமிஸ்டா,
3. பூஞ்சைகள்,
4. பிளாண்டே (தாவரங்கள்) மற்றும்
5. அனிமேலியா (விலங்குகள்)

எனும் ஐந்து பெரும்பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளன.

**குரோமிஸ்டா** எனும் புதிய பெரும்பிரிவு தோற்றுவிக்கப்பட்டு, இதில் பசுங்கணிகத்தில் **பச்சையம் a மற்றும் C** கொண்ட பாசிகளும் இடம்பெற்றுள்ளன.

****************************************************************

JSR முயற்சி - பயிற்சி - தேர்ச்சி